**தலைப்பு 23 – கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழு**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 மே 28 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

2019 திசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்த அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றது.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 03 செலவின விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 3,150,000 தொகை பயன்படுத்தப்படாமல் முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. | வருடாந்த மதிப்பீடுகளை தயாரிக்கும் போது ஏறத்தாழ யதார்த்தமான பெறுமதிகளிற்குரிய நியாயமான பெறுமதிகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்படக்கூடும் என்ற தேவைப்பாட்டைக் கருத்தில் கொண்டு உள்ளூர் பிரயாணச் செலவினங்களிற்காக ரூபா 500,000 தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. செலவினங்களை மேற்கொள்வதற்கான தேவை காணப்படவில்லை. வெளிநாட்டு பிரயாணத் திட்டம் முறையாக நடைமுறைப்படுத்தப்படாமை, 3/2019 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை மற்றும் 04/2019 ஆம் இலக்க பாதீட்டுச் சுற்றறிக்கையின் (2) ஆம் பந்தியின் (V) இன் பிரகாரம் வெளிநாட்டு கல்விச் சுற்றுலாக்கள் மட்டுப்படுத்தப்பட்டதன் காரணமாக வெளிநாட்டு பிரயாணச் செலவினங்களிற்காக |

| | | |
|---|---|---|
| | | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையை பயன்படுத்தி செலவினத்தை மேற்கொள்வதற்கான சாத்தியத்தன்மை காணப்படாதமை மற்றும் பங்களிப்புத் தொகையை செலுத்துவதற்கான தேவை காணப்படாதமை என்பன இச் சேமிப்புக்களிற்கான காரணங்களாகும். |
| (ஆ) 06 செலவின விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 34,800,000 தொகையில் செலவிடப்படாமல் ரூபா 12,035,106 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு செலவின விடயத்திற்கும் உரிய சேமிப்புக்களின் சதவீதம் 29 சதவீதம் தொடக்கம் 92 சதவீதம் வரையான வீச்சல் காணப்பட்டன. | வருடாந்த மதிப்பீடுகளை தயாரிக்கும் போது ஏறத்தாழ யதார்த்தமான பெறுமதிகளிற்குரிய நியாயமான பெறுமதிகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | திட்டமிட்டவாறு பதவியணி பூர்த்திசெய்யப்படாமை, தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் முறையாக அமுல்படுத்தப்படாமை, ஆண்டின் இறுதிக் கட்டத்தில் மேலதிக செயலாளர் பதவி மற்றும் சிரேஷ்ட உதவிச் செயலாளர் பதவி என்பவற்றிலுள்ள வெற்றிடத்தை நிரப்புதல் காரணமாக எரிபொருள் மற்றும் தொலைபேசி படிகள் கொடுப்பனவு செய்யப்படாமை போன்ற காரணங்களினால் நிதியேற்பாடுகள் சேமிக்கப்படுகின்றன. |

**2.2 அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உண்மைப் பெறுமதிகளுடன் ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தால் குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை ஒப்பிடும் போது ஆகக்கூடிய வரவு மீதி எல்லையில் உள்ளபடியான வரவு மீதி 33 சதவீதமாக காணப்பட்டது. | ஆகக் கூடிய மற்றும் ஆகக் குறைந்த எல்லைகளை தீர்மானிப்பதில் யதார்த்தமான பெறுமதிகள் பயன்படுத்தப்பட வேண்டியதுடன் தேவைப்பாட்டின் பிரகாரம் குறித்த சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்காக ஆணைக்குழுவால் பிரயோகிக்கப்பட்ட வரவு மீதி எல்லை ரூபா 8,419,766 ஆகக் காணப்பட்டதுடன் பொதுத் திறைசேரி ரூபா 11,000,000 தொகையான வரவு மீதி எல்லையொன்றை வழங்கியிருந்தது.<br><br>ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தால் குறித்துரைக்கப்பட்ட ஆகக்கூடிய வரவு எல்லைகள் வரை கடன்களைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பங்கள் பெறப்பட்டிருந்த |

| | | |
|---|---|---|
| | | போதிலும் திறைசேரி போதியளவு கட்டுநிதியை வழங்கியிருக்காததால் உத்தியோகத்தர்களுக்கு கடன்களை வழங்குவது சாத்தியமற்றிருந்தது. தேவையான கட்டுநிதியைப் பெற்றுக்கொள்வதற்கும் கடன்களை வழங்குவதற்கும் ஆண்டின் இறுதி வரை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் பொதுத்திறைசேரி தேவையான கட்டுநிதியை வழங்கியிருக்கவில்லை. |

## 3. நிலைபேறான அபிவிருத்தி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் இனங்காணப்பட்டு அவ் இலக்குகளை நிறைவேற்றுவதற்கான திட்டங்கள் ஒவ்வொரு ஆண்டிற்குமான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2019 ஆம் ஆண்டின் போது நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் 2019 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்காத போதிலும் சில இலக்குகள் மற்றும் நோக்கங்கள் செயல்நடவடிக்கைத் திட்டத்தினூடாக நிறைவேற்றப்பட்டிருந்தன. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் 2020 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |